# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 87/2017 ராம்தாஸ் (பிசா1) தேதி: 05.11.2024</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் இந்த வழக்கில் 7ம் பிரதிவாதி. எனது தாயார் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டுவரி ரசீதுகள் **பிசாஆ.1**. எனது சகோதரர் முருகன் பெயரில் வழங்கப்பட்ட காப்பீடு சம்பந்தமான ஆவணம் **பிசாஆ.2**. தாவா சொத்திற்குரிய வில்லங்கச்சான்றிதழ் **பிசாஆ.3**. 20.02.1973 தேதிய கிரையஆவணத்தின் சார்பதிவக நகல் **பிசாஆ.4**. எனது தாயார் பெயரில் செலுத்தப்பட்ட நிலவரி ரசீதுகள் **பிசாஆ.5**. 04.02.2002 தேதிய கிரைய ஒப்பந்த ஆவணம் **பிசாஆ.6**. 1431, 1433 பசலிக்குரிய சாகுபடி அடங்கல் **பிசாஆ.7**.(மேற்படி ஆவணங்கள் வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:</u>** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.